JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 105 /2021 Date:25.07.2022 P.W. 1

பெயர் : மெர்லின்
தந்தை பெயர், க/பெ : பூமணி
முகவரி :
கிராமம் :
மாவட்டம் :
ஜாதி :
தொழில் :
மதம் :
வயது :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 25th day of July 2022.

**முதல் விசாரணை** - நான் தற்போது நம்பர் 3/2, குபேர கணபதி தெரு, மதியழகன் நகர், பாடி, சென்னை 15 என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜரில் உள்ள எதிரிகள் என்னுடை கணவர், 2வது எதிரி மாமியார், 3வது எதிரி என்னுடைய கணவரின் தம்பி ஆவார்கள். எதிரி சேகர் ராஜா ரூபசிங் என்னுடைய மாமனார். எங்களுக்கு 05.02.2018 அன்று எனக்கும் 1ம் எதிரிக்கும் பாடியில் உள்ள சிஎஸ்ஐ சர்ச் ல் திருமணம் நடந்தது. வரவேர்பு அம்பத்தூர் ஷியாம் மஹாலில் நடந்தது. திருமணத்திற்கு பிறகு ஆஜர் எதிரிகள் கேட்ட 100 நகைகள் மற்றும் சீதன ெ பாருட்கள் கொடுத்தார்கள். எதிரிகள் கேட்ட 8 லட்சம் வரதட்சனை பணத்தில் நிச்சயார்த்த்திற்கு முன்பாகவே 2 லட்சம் பணத்தை எதிரிகள் வாங்கி கொண்டார்கள். 13.12.2017 நிச்சயார்த்தம் நடந்தது. அன்றைய தினம் என்னுடைய தரப்பிலிருந்து 1ம் எதிரிக்கு 11 சவரன் செயினும், ஒரு சவரன் மோதிரமும் போட்டோம். நிச்சயார்த்திற்கு பின்பு ஆஜர் எதிரிகளிடம் மீதமுள்ள 6 லட்சம் பணத்தை வரதட்சனையாக கொடுத்தார்கள். திருமண செலவினை இருவீட்டாரும் சமமாக செய்வதாக பேசி எனது பெற்றோா மொத்த செலவையும் செய்து விட்டு எதிரிகள் கொடுக்கவேண்டிய 5,14,000 ரூபாயினை அவர்களிடம் கேட்ட போது 2வது எதிரி பிறகு தருவதாக சொன்னார். திருமணத்திற்கு பிறக என்னுடைய சீர்வரிசை பொருட்களை கொடுங்கையூரில் உள்ள எதிரிகளின் வீட்டில் வைத்தார்கள். திருமணத்திற்கு பிறகு என்னுடைய கணவரின் முகத்தை பார்த்த போது அவருக்கு நடுவில் மீசை இல்லாதத குறித்து கேட்ட போது அவர் தனக்கு விபத்து ஏற்பட்டது என்று சொன்னார். 11.02.2018ம் தேதி அன்று பட்டுக்கோட்டையில் திருமணவரவேற்பு நடந்து முடிந்தது. திருமணத்திற்கு பிறகு அணிமூன் சிம்லா சென்ற போது 2ம் எதிரி என்னுடைய 100 சவரன் நகைகள் மற்றும் தாலி செயினையும் தன்னிடம் கொடுத்துவிட்டு செல்லுமாறு சொன்னார். அதனை கொடுங்கையூரில் உள்ள பீரோவில் வைப்பதாக சொன்னார். 2வது எதிரி சொன்னதை கேட்டு நான் என்னுடைய நகைகளை அவரிடம் கொடுத்தேன். அணிமூன் சென்றுவிட்டு வந்து 2வது எதிரியிடம் என்னுடைய நகைகளை கேட்ட போது என்னுடைய தாலி செயினை மட்டும் என்னிடம் கொடுத்துவிட்டு மற்ற நகைகளை பீரோவில் வைத்தயிருந்தார். அதன் பிறகு 2 மாதத்த்தில் நான் கர்பம் ஆனேன். 1 மற்றும் 2 வது எதிரிகள் என்னை சரிவர கவனிக்காததால் நான் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். 2 வாரங்கள் கழித்து விருகம்பாக்கத்தில் உள்ள 2வது எதிரியின் வீட்டிற்கு சென்று 2 எதிரியிடம் என்னுடைய நகைகளை கேட்டேன். அப்போது பீரோவில் வைத்தயிருந்த பாதி நகைகளை காணவில்லை. அது குறித்து 2 வது எதிரியிடம் கேட்ட போது பேங்க் லாக்கரில் பாதி நகைகளை வைத்துள்ளதாக சொன்னார். 1வது எதிரியிடம் நான் என்னுடைய நகைகளை பற்றி கேட்ட போது தான் மேற்படி

நகைகளை அடமானம் வைத்துள்ளதாக கூறினார். என்னை கேட்டகாமல் ஏன் என்னுடைய நகைகளை அடமானம் வைத்தீர்கள் என்று கேட்ட போது 2வது எதிரி என்னை தலைமுடியை பிடித்து வெளியே தள்ளி துடைப்பத்தால் அடித்தார். நான் கருவுற்று இருப்பது தெரிந்தும் என்னை அடித்து தண்ணீர் கொடுக்காமல் என்னை மிரட்டினார். மற்ற எதிரிகள் அது குறித்து 2வது எதிரியிடம் கேட்கவில்லை. 2வது எதிரி இந்த விவரங்களை என்னுடைய பெற்றோரிடம் சொல்லக்கூடாது என்றும் அவ்வாறு சொன்னால் என்னை எனது கணவருடன் வாழவிடாமல் செய்துவிடுவேன் என்றும் அவ்வாறு கேட்டால் நான் தான் மேற்படி நகைகளை அவர்களிடம் கொடுத்ததாக சொல்லவேண்டும் என்றும் சொன்னார். அவ்வாறு சொல்லுவதாக இருந்தால் வீட்டிற்குள் வருமாறு இல்லை என்றால் உனது பெற்றோரிடம் வாழாவெட்டியாக சென்றுவிடுமாறு சொன்னார். மேற்படி விவரங்களை எனது பெற்றோரிடம் சொன்னால் அவர்கள் கவலைபடுவார்கள் என்று நினைத்து' நான் சொல்லவில்லை. 1வது எதிரியிடம் கொடுங்கையூரில் உள்ள அவரது சொந்த வீட்டிற்கு சென்றுவிடலாம் என்று சொன்னேன். எதிரிகள் அடமானம் வைத்த நகைகளை தவிர மற்ற நகைகளை எடுத்து வந்து கொடுங்கையூருக்கு 1வது எதிரியுடன் சென்றேன். சீமந்தம் முடிந்து நான் மேற்படி நகைகளுடன் நான் பெற்றோர் வீட்டிற்கு சென்றேன். 28.01.2019 எனக்கு பெண் குழந்தை பிறந்தது. எனது மாமியார், மாமனார் பெண் குழந்தை என்று பார்க்க வரவில்லை. குழந்தை பிறந்த சில மாதங்களில் எனது கணவர் இடுப்பு வலி என்று சொல்லி எனது பெற்றோர் வீட்டிற்கு வந்து ஓய்வு எடுத்தார். பெருங்குடியில் உள்ள கம்பெனிக்கு செல்ல கார் வாங்கி கொடுங்கள் என்று கேட்டார். எனது தந்தை என்னுடைய நகைகளை வங்கியில் அடகு வைத்து 2,20,000 ரூபாய் பணத்தை 1ம் எதிரியிடம் கொடுத்து அவர் அந்த பணத்தை வைத்து கார் வாங்கிக் கொண்டார். எனது குழந்தை பிறந்த 3 மாதங்களில் கொடுங்கையூரில் எனது கணவரின் சொந்த வீட்டிற்கு சென்றோம். 2வது எதிரி அந்த வீட்டிலிருந்து காலி செய்துவிட்டு வெளியே செல்லுமாறு சொன்னார். நான் ஏன் வெளியே செல்லவேண்டும் என்று அவரிடம் கேட்டேன். அதற்கு 1ம் எதிரி தனது பெயரில் 25 லட்சம் ரூபாய் கடன் இருப்பதாகவும் சொன்னார். அவர் முகத்தில் 8 ஆபிரேஷன் செய்ததையும் சொன்னார். 2வது எதிரியிடம் வாடகைக்கு குடியிருந்து எவ்வாறு 25 லட்சம் கடனை அடைப்பது என்று கேட்டேன். அந்த வீட்டை வைத்து அந்த பணத்தில் உங்களுக்கு 25 லட்சம் ரூபாய் பணத்தை கொடுக்கிறேன் என்று சொன்னோர். 1வது எதிரி தவிர மற்ற எதிரிகள் என்னை வீட்டை விட்டு வெளியே அனுப்பினார்கள். எனது தந்தை பெருங்குடியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொடுத்தார். 1ம் எதிரி குடித்துவிட்டு எவ்வாறு 25 லட்சம் ரூபாய் பணத்தை அடைப்பது என்று சொல்லுவார். 1ம் எதிரி குடித்துவிட்டு என்னுடைய நகைகளை வைத்து மேற்படி கடனை அடைக்க சொல்லி தொந்தரவு செய்வார். இரவில் தூங்கவிடாமல் அடித்து முகத்தில் எச்சில் துப்புவார், அடித்து கொடுமைபடுத்தி வந்தார். ஏன் இவ்வாறு குடித்துவிட்டு வந்து தொந்தரவு செய்கிறாய் என்று கேட்ட போது அதுகுறித்து கேட்க நீ யார் என்று கேட்டார். என்னுடைய மாமனார் போன் மூலமாக 5 லட்சம் கேட்டு என்னுடைய அப்பாவிடம் கேட்டு வாங்கி வரசொல்லு என்று மிரட்டினார். அதன்பின்னர் நான் குழந்தைக்கு சாப்பாடு ஊட்டிக் கொண்டியிருந்த போது என் கணவர் குடித்துவிட்டு தெவிடியா நாயே உள்ள வாடி என்று என் காதை பிடித்து திருகி என் கன்னத்தில் அடித்து உன் அப்பாவிடம் பணம் கேட்டால் வாங்கி தரமாட்டியா என்று குழந்தையுடன் என்னை கீழே தள்ளி என் வயிற்றில் எட்டி உதைத்து வலி தாங்காமல் நான் சத்தம் போட்ட போது அக்கம் பக்கத்தினர் வந்து தடுத்தனர். அதன் பின்னர் என் அப்பாவிற்கு போன் செய்த போது என்னுடைய போனை வாங்கி உன் அப்பாவிடம் சொன்னால் உன்னையும் உன் குழந்தையையும் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார். என்னை வீட்டிற்குள் வைத்து பூட்டிவிட்டு வெளியே சென்றுவிட்டார். காலையில் எனது கணவர் கதவை திறந்தபோது நான் குழந்தையுடன் வெளியே வந்த போது ஆட்டோ ஏறி என் அப்பா வீட்டிற்கு சென்றுவிட்டேன். 20.01.2020 என்னுடைய அண்ணனுக்க திருமணம் நிச்சயக்கப்பட்டுயிருந்ததால் உடனடியாக என்னால் புகார் கொடுக்க முடியவில்லை. என் அண்ணனின் திருமணம் முடிந்த பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான்

கொடுத்த புகார் அதசாஆ.1. என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-** இல்லை.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur.

JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No.105/2021 Date:25.07.2022 P.W. 2

பெயர் : பூமணி
தந்தை பெயர், க/பெ : செல்லக்கண்
முகவரி :
கிராமம் :
மாவட்டம் :
ஜாதி :
தொழில் :
மதம் :
வயது :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 25th day of July 2022.

**முதல் விசாரணை** - நான் தற்போது நம்பர் 3/2, குபேர கணபதி தெரு, மதியழகன் நகர், பாடி, சென்னை 15 என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் காவல் துறையில் 34 வருடங்களாக பணி புரிந்து விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். அசா.1 எனது மகள் ஆவார். அசா1 ற்க திருமணம் செய்ய முடிவு செய்து 1வது எதிரிக்கு திருமணம் செய்து கொடுக்க முடிவு செய்து இருவீட்டாரும் சேர்ந்து சம்மந்தம் பேசி முடித்தோம். நிச்சயார்த்திற்கு முன்பாக வட்டக்கோட்டை எதிரிகள் வீட்டை பூச வேண்டும் என்று சொல்லி 2,00000 ரூபாயினை வரதட்சனை முன்பணமாக வாங்கினார்கள். 13.12.2017தேதி என் வீட்டில் எளிமையான முறையில் நிச்சயார்த்தம் நடந்தது. நிச்சயார்த்ததின் போது 11 சவரன் செயினும் ஒரு சவரன் மோதிரமும் மாப்பிள்ளைக்கு கொடுத்தோம். பின்பு அன்றைய தினம் நிச்சயார்த்தம் முடிந்த பின்னர் 6 லட்சம் முன் பணம் எதிரியிடம் கொடுத்தேன். 11.02..2017ம் தேதி அவர்கள் வீட்டில் வட்டக்கோட்டையில் திருமண வரவேற்பு நிகழச்சி வைத்துயிருந்தார்கள். நானும் என் குடும்பத்தாரும் சென்றியிருந்தோம், மறுநாள் 100 சவரன் நகையும், தாலியும் 2வது எதிரியிடம் கொடுத்துவிட்டு 13.02.2017ம் தேதி சிம்லாவிற்கு எனது மகள் அணிமூன் சென்றார். அணிமூன் சென்றுவிட்டு விருகம்பாக்கத்தில் உள்ள வீட்டிற்க வந்தார்கள். என் மகள் 2வது எதிரியிடம் தாலியை கேட்டார். 2வது எதிரியை பீரோவை திறந்து நகைகளை காட்டி தாலியை மட்டும் கொடுத்தார். சிறிது நாட்கள் கழித்து கொடுங்கையூரில் சொந்த வீட்டிற்கு வந்துவிட்டார். குழந்தை நின்ற 7வது மாதத்தில் சீமந்தம் செய்து எனது வீட்டிற்கு அழைத்து வந்தேன். வரும் போது எனது மகள் 60 சவரன் நகைகள் எடுத்து வந்தார். மீதி நகைகள் எங்கே என்று என்னுடைய மகளிடம் கேட்ட போது அவர்கள் வட்டக்கோட்டையில் வீட்டு வேலைக்காக நகைகளை அடகு வைத்து 5,70,000 எதிரிகள் வாங்கியதாக எனது மகள் சொன்னார். 28.01.2019ம் என் மகளுக்கு பெண் குழந்தை பிறந்தது, அந்த குழந்தையை பார்க்க மாமினார், மாமியாரும் பார்த்துவிட்டு பெண் குழந்தை என்று துக்கப்பட்டு சென்றார்கள். குழந்தை பிறந்த 3 மாதங்களில் எனது மகளையும், குழந்தையும் கொடுங்கையூரில் வீட்டிற்க அழைத்து சென்றுவிட்டார். எனது மருமகன் வீட்டில் இருந்தார், வேறு யாரும் இல்லை. மறுநாள் மாமினார் சேகர், மாமியார் விஜி, பிரேம் ஆகியோர் வந்து இந்த வீட்டில் நீ இருக்கக்கூடாது என்று இந்த வீட்டை விற்க போகிறேன், முன் பணமாக ரூ. 2,00,000 அட்வாண்ஸ் வாங்கிவிட்டேன் என்று கூறினார்கள். அதை நானும் என் மனைவியும் கேட்ட போது 1வது எதிரி மீது 23 லட்சம் கடன் இருப்பதும், முகத்தில் 8 ஆபிரேஷன் செய்ததும் அவர் ஒருவருடத்தில் 3 கம்பெனி வேலை மாறியதும், 10 கிரிடிட் கார்டு கையில் வைத்துயிருப்பதும் அவருடைய சம்பளம் ரூ.23 லட்சம் வங்கி கடனுக்காக பிடித்தம் செய்யப்பட்டது தெரியவந்தது. ஏன் இதை எல்லாம் மறைத்தீர்கள் என்று கேட்ட போது ஏற்கனவே

5,70000 ருபாக்கு நகைகளை அடகு வைத்ததும் 1வது எதிரிக்கு இடுப்புவலி என்று சொல்லி வேலைக்கு போகாமல் என்னிடம் 2,20000 ருபாய்க்கு பணம் பெற்று 3,80000 கார் வாங்கினார். அதன் பின்பு அந்த வீட்டிலிருந்து வெளியேறி பெருங்குடியில் ஒரு வீட்டில் வாடகைக்கு வைத்தேன். 1வது எதிரிக்கு வேலை இல்லாததால் தினமும் குடித்துவிட்டு வந்து என் மகளை தொந்தரவு செய்து என்னிடம் 5 லட்சம் வாங்கி வா என்று மகளிடம் பேசி அவர் முகத்தில் எச்சில் துப்பி அடித்து கீழே தள்ளி காலால் எட்டி உதைத்து அடிவயிறு வலிக்கிறது என்று சொல்லவிடாமல் அவர் எனக்கு போன் பன்ன விடாமல் அவளை வீட்டில் வைத்து பூட்டிவிட்டார். அவர் பட்டினியாக படுத்தியிருந்தார். மறுநாள் காலை கதவை திறந்த போது அவர் ஆட்டோவில் ஏறி எனது வீட்டிற்கு வந்துவிட்டார். என் மகள் என்னிடம் சொன்னது விருகம்பாக்கத்தில் இருந்த போது அவர்களே நகைகளை எடுத்து அடமானம் வைத்துவிட்டார்கள், ஏன் என்னை கேட்காமல் நகைகளை அடமானம் வைத்தீர்கள் என்று கேட்ட போது 2வது எதிரி' நகையை கேட்டால் கொடுக்கவேண்டும் இல்லை என்றால் என் மகன் உன்னிடம் வாழ மாட்டான் என்று கூறினார்கள். இந்த நகைகளை அடமானம் வைத்தோம் என்று' உன் பெற்றோரிடம் சொல்லக்கூடாது. அவ்வாறு கேட்டால் நானே எடுத்து கொடுத்ததாக சொல்லவேண்டும் என்று சொல்லியுள்ளார்கள் என் மகள் மறுத்த போது என் மகளின் தலைமுடியை இழுத்து துடைப்பத்தால் அடித்து கீழே தள்ளி கொடுமைபடுத்தியதாக என் மகள் என்னிடம் தெரிவித்தார். மாமியார் விஜி சினிமாவில் நடிப்பதும், டிக்டாக்கில் இருப்பதும் தெரியவந்தது. 1ம் எதிரி எங்கள் வீட்டில் இருந்த போது 23 லட்சம் ரூபாய் கடனை மீட்க சொல்லி தாய் மகனும் பேசிய வாய்ஸ் பதிவுகள் என் மகளிடம் பென்டிரைவரில் கொடுத்துவிட்டார். அதன் பின் வாய்ஸ் ரெக்காடை நாங்கள் கேட்ட போது தாய் மகனும் பேசிக்கொண்ட 8 லட்சம் ரூபாய் வரதட்சனையாக வாங்கியதை அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். 5,70,000 நகைகளை அடமானம் வைத்ததை அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். கார் வாங்கிய 2,20,000 பணம் கொடுத்ததையும் பேசிக் கொண்டார்கள்.

(எதிரிகள் பேசிய உடையாடல் அடங்கிய பென்டிரைவ் குறியீடு செய்ய முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -** தற்போது இல்லை.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur.